EVELYN RUTNAM JAFFNA
3/1

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



நல்லூர், நாயன்மார்கட்டு

ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர்

# திருவூஞ்சல்

INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY
JAFFNA

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நல்லூர், நாயன்மார்கட்டு

ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர்

# திருஊஞ்சல்

இஃது

மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற

எட்டாவது ஆண்டு

மணவாளக்கோலத் திருவிழாவின்போது

அடியார்களுக்கு அன்பளிப்பாக

வழங்கப்பெற்றது.

1973

அச்சுப்பதிவு:

ஸ்ரீ காந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

2317

உ
சிவமயம்

# யாழ்ப்பாணத்து நல்லூர் நாயன்மார் கட்டில் எழுந்தருளியுள்ள வெயிலுகந்த விநாயகப் பெருமானின்
# ஆலய வரலாற்றுச் சுருக்கம்

இந்துப் பேராளியின் நடுவிலமைந்து நன் முத்தென ஒளிகான்று வருவது ஈழம் என்னும் இலங்கைத் தீவாகும். யாழ்ப்பாணம் இதன் வட பாலுள்ளது. கி. பி. 16 ஆம் நூற்றுண்டுத் தொடக்கத்திலே அந்நியர் இங்கு அடி எடுத்து வைத்துப் படிப்படியாக ஆதிக்கம் கொள்ள முன்னர் யாழ்ப்பாணத்தைத் தமிழ் மன்னர்கள் சீருடனும் சிறப்புடனும் ஆண்டு வந்தனர். அவர்களின் காலத்திலே இங்குச் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கின.

தமிழரசர்களின் தலைநகராய் விளங்கியது நல்லூராகும். நல்லூர்க் கீழைக் கோபுர வாயிலின் தென்புறத்தே சிங்கையாரிய சக்கரவர்த்தி என்பவர் முதன் முதல் விநாயகருக்கு ஓர் ஆலயம் சமைத்தான். இவ்வாலயத்தின் கருவறையூடாகக் கதிரவனின் ஒளி விநாயகப் பெருமான்மீது நாள்

தோறும் விழலாயிற்று. இதனைக் கண்ட சிங்கை யாரியன் ''இவர் வெயில் உகந்த விநாயகர்'' என்று உரைத்து உருகினான். அன்றிலிருந்து இப் பெருமான் வெயிலுகந்த பிள்ளையார் எனவும் அடியார்களால் அழைக்கப் பெற்று வருகின்றார்.

சிங்கையாரியன் இவ்வாலயத்தின் நித்திய நைமித்தியப்பூசைகளை நடாத்தவெனச் சோழ நாட்டுத் திருப்பதியாகிய வேதாரணியத்திலிருந்து பரமானந்த குரு என்பாரை அழைப்பித்துக் கோயிலின் அருகிலுள்ள காணியிலே குடியேற்றினான். பரமானந்த குரு பரமானந்த பண்டாரம் எனவும் குறிக்கப் பெற்றமையால் அவரும், அவர் சந்ததி யாரும் வாழ்ந்ததும் வாழ்கின்றதுமாகிய காணிக்குப் ''பண்டார வளவு'' என்ற பெயர் இன்னும் வழங்கி வருகின்றது. பரமானந்த குருவின் சந்ததியினரே வெயிலுகந்த விநாயகராலய அறக் காவலராயும் பூசகராயும் இன்றும் விளங்கி வருகின்றனர்.

விநாயகப் பெருமானுக்குத் தீர்த்தமாடுதற்கும் தாமரை மலர்கள் பெறுதற்கும் தெப்போற்சவம் நடாத்துதற்கும் சிங்கையாரியன், ஆலயத்தின் தென்கிழக்குத் திசையிலே குளம் ஒன்றினை வெட்டுவித்தான். காசியிலுள்ள மணிகர்ணிகை நதியினின்றும் தீர்த்தக் காவடிகளிலே தீர்த்தம்

எடுப்பித்து இக்குளத்திலே விடுத்து இதனைப் புனிதம் செய்தான். தமிழரசர்களின் இறுதிக்காலம் வரை இத்தாமரைக் குளமானது நாயன்மார்கட்டின் நல்லணியாக விளங்கி இவ்வூருக்கு அழகையும் புனிதத்தையும் அளித்து வந்தது. இக்குளத்தின்நிலை நாளடைவில் குன்றிவிட்டது.

நிற்க, வெயிலுகந்த விநாயகர் ஆலயத்தின் பெருமையும் அங்குக் கோயில் கொண்டுள்ள பெருமானின் மகத்துவமும் அளவிடற்கரியனவாயிருந்தன. தம் சூழலிலே, நாயன்மார் குருபூசை மடத்தையும், அரசகேசரிப்பிள்ளையார் ஆலயத்தையும், ஸ்ரீ இராஜராஜேஸ்வரியம்பாள் (பேய்ச்சியம்பாள்) ஆலயத்தையும் பெற்று அடியார்களுக்கு எம்பெருமான் அருள்பாலித்து வந்தார்.

இந்நிலையில் அந்நியராகிய போர்த்துக்கேயரின் சமயச் சகிப்பின்மை காரணமாக அண்மையிலுள்ள நல்லூர்க் கந்தசுவாமி, சட்டநாதர், கைலாயநாதர் கோயில்களுக்கு ஏற்பட்ட கதி எம் விநாயகப் பெருமானின் ஆலயத்திற்கும் ஏற்பட்டது. அவர்களாலே ஆலயம் இடியுண்டு விநாயகப் பெருமானின் திருவுருவச்சிலை மண்ணுள்ளே புதைந்து கிடந்தது. ஒல்லாந்தர் ஆட்சி ஒழிந்து ஆங்கிலேயரின் ஆட்சி ஏற்பட்ட காலத்திலே ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பெற்ற பொழுது, திருவுருவச் சிலையும் கண்டெடுக்கப் படலாயிற்று.

அதுவே, இன்று செம்மணிவீதியை நோக்கிய வண்ணம் வடதிசையில் எழுந்தருளியிருந்து அருள் பாலித்து வருகின்றது. கருவறை விக்கிரகம் சென்ற நூற்றாண்டிலே நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் கட்டடத் திருப்பணிக்கு வந்திருந்த ஆசாரி ஒருவராலே திறம்பட ஆக்கப்பெற்றதாகும்.

ஆலயம் 1825 ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் மீண்டும் நாயன்மார்கட்டில் புலவர் என்றழைக்கப்படும் திரு. சி. குமாரசுவாமியவர்களின் பூட்டனாராகிய சிதம்பரநாதர் வீரகத்தியாரினால் புனருத்தாரணம் செய்யப்பெற்றுக் கும்பாபிடேகம் செய்யப்பெற்றது. அநேக வருஷங்களுக்குப் பின்னர் 1965ஆம் ஆண்டுக்குச் சமமான பராபவ ஆண்டு வைகாசித்திங்கள் 26 ஆம் நாள் புதன்கிழமை காலை 10 மணி 30 நிமிடம் தொடக்கம் 11-48 வரை சிங்கலக்கின மங்கலத் திருவோரையில் திருவோணம் நக்ஷத்திரத்தில் முன்னாள் மலேசிய மாகாண அரசவை உறுப்பினராய் விளங்கிய திரு. இராமலிங்கம் நாகரத்தினம் அவர்கள் குடும்பத்தினராலே புனருத்தாரண கும்பாபிஷேகம் மேற்கொள்ளப்பெற்றதுடன் விநாயகப்பெருமானின் திருவுருவம் அமைந்த புதிதாய் வார்க்கப்பட்ட உற்சவமூர்த்தியும் அக்குடும்பத்தினரால் பிரதிஷ்டை செய்யப்பெற்றது.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

— திருமூலர்

உ
சிவமயம்

## யாழ்ப்பாணம் நல்லூர்
## நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகர்

# திருவூஞ்சல்

செந்திருவாழ் யாழ்ப்பாண நாட்டின் மிக்க
திகழ்நல்லை நகரியிடை யரசனான
விந்தை மிகுஞ் சிங்கையாரி யன்ருபித்த
வெயிலுகந்த விநாயக எம்பெருமான்மீது
செந்தமிழா லூஞ்சலிசை யினிது பாடத்
தேவரெல்லாம் முதல்வணங்குந் தெய்வமாகி
வந்துதயஞ் செய்தபிரா னவன்றேன்
வசைமலர்ப் பதந்துணையே காப்பதாமே. 1

மண்ணுலகின் மேருநிகர் தூண்க ணட்டி
வலியமர கதம்புதிய விட்டம் பூட்டிப்
பண்ணுலவு முத்துமணிக் கயிறுமாட்டிப்
பத்தரைமாற் றுத்தங்கப் பலகை சேர்த்தித்
தண்மையுட னமர்ந்தருளும் படியேயாகச்
சமைத்ததிரு வூஞ்சற்பீடந் தன்னில்வைகி
விண்ணிலவு பொழில்நல்லை நகரிமேவும்
வெயிலுகந்த விநாயகரே யாடீருஞ்சல். 2

ஆதவனுஞ் சந்திரனு மாடிகாட்ட
அடியவர்க ளகரவென் றுர்த்துநிற்பப்
போதமுறு முனிவர்குழாம் புகழ்ந்து சூழப்
பொருவில்கண நாதர்புடை சூழ்ந்துமல்க

ஏதமிலா வந்தணர்க ளாசி சாற்ற
இயம்பியவர்க் கியத்திஞெளி திகாந்தமேவ
வேதநெறி சதக்கிரது போற்றும் நல்லை
வெயிலுகந்த விநாயகரே யாடீரூஞ்சல். 3

வந்துதொழு மடியவருக் கிசைந்தபேற்றை
மருதுதவு சித்தீச! ஆடீரூஞ்சல்
சந்ததமுந் தண்ணளியை யுதவித்தொண்டத்
தகைமையுள மானுடரைத் தாய்போற்காத்தே
இந்தநிலத் தவர்சிறப்ப விசைந்தகீர்த்தி
யீகையறி வாதியன வியல்பாற்றந்த
வெந்தழல் செங்கரத்தாங்கு சம்புமைந்த
வெயிலுகந்த விநாயகரே யாடீரூஞ்சல். 4

ஆங்காரக் குறும்பகன்று பதமேநஞ்சும்
அடியவர்கட் கருள்பவரே யாடீரூஞ்சல்
சிங்காரத் தனிமுதலாம் வடிவா உன்னை
உளத்திடையே விடாது நினைவோரைக் கொண்டாங்
பாங்காருஞ் சோலைசெறி மண்டபங்கள்
பன்னவரத் தினக்குவை கற்பகங்கள்பூஞ்ஞல்
வீங்குபனை முலையர்முத் லுதவுநல்லை
வெயிலுகந்த விநாயகரே யாடீரூஞ்சல். 5

மதி தவழுஞ் செஞ்சடையா யாடீரூஞ்சல்
மழு வாகுப் பரியுகைப்பா யாடீரூஞ்சல்
துதி முறைபோற் பொருளாரே யாடீரூஞ்சல்
தூய பரம்பொருளாரே யாடீரூஞ்சல்

கதி பெறுவார் தொழுபவரே யாடீருஞ்சல்
கணபதியாம் பெயராரே யாடீருஞ்சல்
விதி முறையாற் கருள்பவரே யாடீருஞ்சல்
வெயிலுகந்த விநாயகரே யாடீருஞ்சல். 6

நாதந்தங் கடந்தபர வருளின் மேவி
நான்மறையோ டாகமங் குளிளிது நல்கிப்
போதந்த முணர்ந்த பெரும் பொருளதாகிப்
புண்ணியர்கள் புகழ்ந்தேத்தும் பொருளாயென்றும்
பாதாந்தந் தொழவருவார் பவங்கள் நீங்கிப்
பனிந்தவருட் சித்திபுத்தி பாங்கின் மேவ
வேதாந்த நெறிகடந்தார் விரதம்நல்லே
வெயிலுகந்த விநாயகரே யாடீருஞ்சல். 7

ஆண்டானே யெங்குலத்தை யுலகங்காத்து
அரனடியைக் கண்டிடவே பூதலத்தைக்
கீண்டானே வருத்திய வெஞ்சாப வாக்கைக்
கிருபாலு வாதலினுற் ருமேநீங்க
பூண்டானே புரந்தகனன் றுமையளித்த
புத்திரவைங் கரனேமுக்கண்ண! எந்தாய்
வேண்டுவோர் வேண்டுவர முதவும்நல்லே
வெயிலுகந்த விநாயகரே யாடிருஞ்சல். 8

மங்குல்தவழ் மாடமிடை யாழ்ப்பா ணத்து
மருவுநல்லே யருட்குறையா யாடீருஞ்சல்
எங்குநிறை பாசாங்குசங்க ளேந்து
மெழில்யானே முகனே யோங்காரரூபா

இங்குளது பாதமலர்க ளர்ச்சிப்பாருக்
    கிகபரத்தை யருள்சித்தா மணியேகண்ணே
வெங்கலிதீர்த் தாண்டமயூ ரேசாநல்லை
    வெயிலுகந்த விநாயகரே யாடீருஞ்சல். 9

பத்திமிக மந்தணர் ராதியர்கள் வாழி
    பசுவாழி முகில்வாழி செங்கோல் வாழி
உத்தம வைதிக சைவசமயம் வாழி
    உண்மையுறும் மகளிர் பதிவிரதம் வாழி
நித்தியபூசனை செய்யுமடியர் வாழி
    நீடுதிருப் பணிக்குதவு மடியர் வாழி
வித்தகஞ் சேர்திருநல்லை நகரிமேவும்
    வெயிலுகந்த விநாயகரே வாழிவாழி. 10

## எச்சரீக்கை

கீங்காரத் துட்பொருளே ஒளியே எச்சரீக்கை
உமைமைந்தா இபமுகத்தாய் சேவே எச்சரீக்கை
நீங்காவெய் யிலுகந்தாய் நீதா எச்சரீக்கை
நீபத்தாரோற் கருள்புரியு நீதா எச்சரீக்கை. 1

சிங்கையாரியன் கோயில் சேர்ந்தாய் எச்சரீக்கை
சீரோங்கு நாயன்மார்கட் டுறைவாய் எச்சரீக்கை
பங்கையா சனன்பணியும் பாதா எச்சரீக்கை
பத்தர்தமக் கருளும் பரமா எச்சரீக்கை. 2

## பராக்கு

வெய்யிலுகந்த விநாயகராம் விமலா பராக்கு
வேதங்கள் போற்றுகின்ற விண்ணவா பராக்கு
உய்யவெனை ஆண்டருளும் உணர்வே பராக்கு
ஒருமருப்பின் கரமுடையாய் உச்சமா பராக்கு. 1

ஐங்கரத்தாய் கசமுகத்தாய் அத்தா பராக்கு
ஆவலர்க் கருள்கின்ற அருளாய் பராக்கு
துங்க நாயன்மார் கட்டில்துய்யா பராக்கு
தொல்லுலகர் பேசுகின்ற சுடரே பராக்கு. 2

## லாலி

அம்புவியின் நாதருக்கும் லாலி லாலி
ஆனைமுகத் தவருக்கும் லாலி லாலி
அம்பகங்கள் மூன்றருக்கும் லாலி லாலி
அருமறையின் வடிவருக்கும் லாலி லாலி. 1

ஏகாந்தங் கொண்டார்க்கும் லாலி லாலி
ஈசனார்தம் மைந்தர்க்கும் லாலி லாலி
ஆதவனை யுகந்தார்க்கும் லாலி லாலி
ஆனைவதனத் தேவர்க்கும் லாலி லாலி. 2

## மங்களம்

மங்களம் மங்களம் நித்திய சுப செயமங்களம்
கங்கையுமை மைந்தருக்கும் காதலடியர்
[ புத்தியர்க்கும்
வெங்கலியைத் தொலைப்பார்க்கும் வேதங்கள்
[ மலைப்பார்க்கும்
மங்களம் மங்களம் சுபசெய மங்களம்.

உ

சிவமயம்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே.

திருச்சிற்றம்பலம்

— திருநாவுக்கரசுநாயனார்

## திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குஞ்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருச்சிற்றம்பலம்

— மாணிக்கவாசகசுவாமிகள்

## திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

புவன நாயகனே யகவுயிர்க் கமுதே
பூரணா வாரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதி பன்னகாபரணா
அவனிஞா யிறுபோன் றருள்புரிந் தடியே
னகத்தினு முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலுமமர்ந்தாய்
தனியனேன் றனிமை நீங்குதற்கே.

திருச்சிற்றம்பலம்

— கருவூர்த்தேவர்

## திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத் தும்நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்.

— சேந்தனார்

## திருப்புராணம்

திருச்சிற்றம்பலம்

தண்ணளிவெண் குடைவேந்தன்
    செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார்
    வானவர்பூ மழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே
    அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான்
    வீதிவிடங்கப்பெருமான்.

திருச்சிற்றம்பலம்

— சேக்கிழார்சுவாமிகள்

## திருப்புகழ்

திருச்சிற்றம்பலம்

எதிரி லாத பத்தி தனைமேவி
    இனியதாள் நினைப்பை இதுபோதும்
இதய வாரிதிக்குள் உறவாகி
    எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பில் உறைவோனே
    கனகமேரு ஒத்த புயவீரா
மதுர வாணி உற்ற கழலோனே
    வழுதி கூன்நி மிர்த்த பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

— அருணகிரிநாதர்

## வாழ்த்து

நல்லையின் எல்லை தன்னில் நலமுற வீற்றிருந்து
தொல்லைகள் விக்கினங்கள் தொலைந்திட அருளும் வள்ளல்
வெல்லுநல் லிசையார் எங்கள் வெயிலினை உகந்த பெம்மான்
எல்லவர் தமக்கும் இன்பம் ஈந்துமே வாழி வாழி.

---

# ஆலய வளர்ச்சிக்கு நாம் செய்ய வேண்டுவன.

1. முன்மண்டபத்தைப் பெரிதாக அமைத்தல்.
2. திருத்தேர்ப்பணி.

**இவற்றைச் சைவப்பேரன்பர்கள் முன்வந்து முற்றுவித்து வெயிலுகந்த விநாயகப்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரராவார்களாக.**

உ

கடவுள் துணை

மதிவள மார்த்தாண்ட மந்திரி பாடியது:

திருவளரிலங்கை யோங்கித் திகழுமியாழ்ப்பாண நல்லூர்ப்
பெருவளந்தோங்கத் தேங்கும் பெட்புயர் நயன்மார்கட்டில்
பெருவளர் வெயிலுகந்த விநாயகர் பிரதிட்டைமுற்றி
மருவுசிங்கை யாரியப் பேர்மகிபதி மன்னனென்போன். 1

நலமுறு மிராசதானி நன்மையாய் நடக்குநாளில்
கலிமூவாயிரத்திேைடு கருதுறு மிருபத்தைந்தின்
நிலவிய வருஷந் தன்னில் நிகரிலா விராச ராசன்
பலருடைப் பவங்கள் போக்கப் பருங்குளப் பணியுஞ் செய்
[தான்.] 2

நித்திய பூசைக்கான நிருநயம் பலவுஞ் செய்து
பத்திமையொடு பூசிக்க பரமானந்த குருவை வைத்
சுத்தமாருச் சவாதிசொல்லியவிதியிற்செய்வித் [தே
உத்தம நயன்மார்கட்டு வுயர்குளமதனிற் றீர்த்தம்

என்றென்று நடக்குமாறு மிறையவன் நிருபஞ் செய்து
பொன்றிலாத் தானியங்கள் பொலிவுடன் விழைநிலங்கள்
மன்றவே தருமமாக மானியம் பலவு நல்கி
குன்றிடாதிருக்குமாறு குறைவில் சாதனமுஞ் செய்தான். 4

உ

கடவுள் துணை

வெண்பா

இராசகேசரி என்பவரால் பாடப்பெற்றது:

## குலசங்கரமாலை

## மூலம்

காப்பு

திருமாலி னுந்தியெனச் செவ்விபெறும் புட்பப்
பெருமைசேர் நாயன்மார் குளத்தின் – திருவதனை
இன்னிலத்தே யோதுதற்கு ஏரம்பன் பாதமலர்
மன்னு மெனது மனத்து. 1

தேரும் திருவிழாவும் தீர்த்தமும் சிங்கை
யாரியன் வெயிலுகந்த வாகுவினை – யூருவோற்கு
மூவாயிரமாக முன்னே கலியாண்டில்
தாவ வியற்றினான் தனித்து. 2

பொங்குபுகழ்சேர் பொருப்பன்ன தோளிணைகள்
சிங்கையாரியனே வெயிலுவக்கு – மங்குசத்தோன்
தீர்த்தம் பெறுதற்கு செய்தளித்தான் துய்யமணி
கர்ணிகை யெனும் குளமே காண். 3

பற்றலர்க் கேறன்ன பார்த்திவன் எண்ணியே
கொற்றமுடன் நாயன்மார் குளமதனை — முற்றுவித்தான்
மூவாயிரத்தோடு மூன்றுமிருபத் தைந்
தாவாயுஞ் சொல்கலியிற்முன். 4

நாயன்மார் ஊரதுவும் நன்மைசேர் குளமதுவும்
தூயவிதமாகச் சொல்படிக்கு – மேயிருக்கும்
யாழ்ப்பாடி ஆண்டிருந்த யாழ்ப்பாண நகர்க்கணி
கேழ்க்கும் படியிதுவே காண். 5 [யாக்

காட்டுங்குளப்பரப்புக் கற்றவருங் காணரிய
நீர்க்கணக்குமோர் நூறும் நீழ்நிலத்தில் – கூட்டும்
புளக்கணக்குமோர்நூறும்அப்பும்அரும்பொருளாம்
நாட்டுமிது நாயன்மார்கட்டே. 6

நயினர் நல நல்மடமாம் நாயன்மார் வீதியிது
பெருமான் கிருபை தரப்பெற்றே – பயில்வாரும்
ஓர்நாளும் இவ்வருமை உற்றரும் பெற்றறியார்
அத்தன் செயலிதுவேதான்.

குணபூஷண சிங்கையாரியன்

ஆரியன் மந்திரியாம் அடியவர் நல்லவனும்
பாரிய குளத்தைப் படியுடன் – கூரிய
மதியால் ஆய்ந்து (மடத்தையுங்) கட்டி
விதியாலே நாட்டினன் காண்.

மடம் என்பது — அறுபத்து மூன்று நாயன்மார்
குருபூசை மடம்.

பார்புகளும் நாயன்மார் பரிவான சந்ததிக்கு
பேர்புகளும் ஞானமும் பெருகுமே – செந்தமிழும்
செங்கோன் முறைவழங்கும் செப்பரிய நாயன்மார்
தங்கியிருக்குமிடம் தான். 1

இரகுவம்மிசஞ்செய் இந்திரனும் கேசரியார்
உரனுடன் மேன்மாட மிரந்தே – வரமுடன்
பாடினர் பங்கயக் குளப் பாங்கரிலே
கூடினர் நாயன்மார் தேர். 2

காட்டுங்குலசங் கரமாலே பத்தினையும்
வாட்டுமிராச கேசரியே – நாட்டும்
குலச்சிறப்பு குவலயத்தோர் தாம்விளங்க
தவச்சிறப்பும் பாடினன் பார்.

இப்பாடல்கள் நீதிநூல் திரட்டென்னும்
ஏட்டுப் பிரதியிலுள்ளது.

ஸ்ரீ காந்தா அச்சகம்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 256